# KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE

(Autonomous)

Coimbatore – 641 029

Estd 1973

## Extension and Outreach Programs Conducted in Collaboration with Industry, Community and Non - Government Organisations

## Academic Year 2014-2015

| Name of the Activity | Awareness Programme on “Students Responsibility in Clean India” & “Child Labour Abolish” |
|---|---|
| Organising Unit/ Agency/ Collaborating Agency | TN NCLP Project, Coimbatore |
| Number of Students participated | 500 |

**அறிக்கை**

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகுகள் - IV & V சார்பில் **“தூய்மை இந்தியா”** மற்றும் **“குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு”** விழிப்புணர்வுக் கருத்தரங்கம் **08.10.2014, புதன்கிழமை**யன்று கல்லூரிக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. **சி. விஜயா** அவர்களும் தேசியக் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்ட இயக்குநர் திரு. **டி. வி. விஜயகுமார்** அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். முதலாவதாகப் பேசிய திருமதி. **சி. விஜயா** அவர்கள், மாணவர்கள் கல்வி கற்பதோடு மட்டுமல்லாமல் நல்ல பண்புகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தாங்கள் பயிலும் வகுப்பறை, கல்லூரி ஆகியவற்றைத் தூய்மையாக வைத்துக் கொள்ள ஆர்வம் கொள்ள வேண்டும். நமது இந்தியப் **பிரதமர் மேதகு. நரேந்திரமோடி** அவர்களால் தொடங்கப்பட்டுள்ள **“தூய்மை இந்தியா”** என்னும் திட்டத்தை மாணவர்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் எதிர்கால இந்தியா தூய்மை மிகு இந்தியாவாக உருமாறும். இதற்கான ஏற்பாடுகளையும் உதவிகளையும் ஆசிரியர்களும், கல்லூரி நிர்வாகமும் செய்து கொடுக்க வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. **டி. வி. விஜயகுமார்** அவர்கள், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க மாநில, மைய அரசுகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன. இது குறித்த தகவல்களையும் விழிப்புணர்வினையும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்களாகிய நீங்கள் அறிந்து கொண்டு, அதனைப் பொதுமக்களிடத்து எடுத்துரைக்க வேண்டும். குழந்தைத் தொழிலில் ஈடுபடுத்தப்படுவோரில் பெரும்பான்மையானோர் படிப்பு குறித்த பெற்றோரின் வற்புறுத்தல் தாங்காமல் வீடுகளை விட்டு ஓடிவந்தவர்கள். குறைந்த ஊதியம், மிகுதியான வேலை, ஏமாற்றத் தெரியாமல் உண்மையாக உழைத்தல் முதலான காரணங்களால் குழந்தைத் தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். இது சமூகக் குற்றமாகும். இந்தக் குற்றங்களைக் களைய நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் முழுமூச்சாகச் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

முன்னதாக இக்கருத்தரங்கிற்குக் கல்லூரி இணைச் செயலர் திருமதி. **சி. ஏ. வாசுகி** அவர்கள் தலைமை தாங்கினார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் **க. பழனிவேல்** அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கல்லூரி முதல்வர் முனைவர் **த. முரளீஸ்வரி**, சுயநிதிப்புல முதன்மையர் முனைவர் **வெ. சுகந்தா**, தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **மொ. இரவிக்குமார்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர் செல்வன் **மு. ஜீவபாரதி** நன்றியுரையாற்றினார். நாட்டுப்பண்ணுடன் கருத்தரங்கம் இனிதே நிறைவுற்றது.

இக்கருத்தரங்கில் தமிழ்த்துறை மற்றும் பிறதுறைப் பேராசிரியர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த நாட்டு நலப்பணித் திட்டத் தொண்டர்கள் என 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் **க. பழனிவேல்**, செல்வி **டி. தீபிகா** ஆகியோர் செய்திருந்தனர்.









Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.,
NSS Programme ... IV
Kongunadu Arts & ... College
Coimbatore - 641 029

**English Translation:**

NSS Unit 4&5 of Kongunadu Arts and Science College organised a one day Conference on the topic "Clean India" and "Child Labour Abolish" in 08.10.2014 at our college Conference Hall.

The chief guests of this special function are Mrs. C. Vijaya, District Child Care Officer and Mr. T. V. Vijayakumar, Director, National Child Labour Abolishment Plan. At first Mrs. C. Vijaya, spoke about the importance of child care in India, She gave special important to our Country Prime Minister, Narendra Modiji's "Clean India" plan. She requested every student and as well as our college management to take a special need and care for this Clean India plan.

Mr. T. V. Vijayakumar, spoke about the abolishment of child labour in our country, he described various causes and consequences of this child labour problem. Vijayakumar represent each and every parent should take care of their own children, because many problems took place because of the injustice and disregard of the parents. He advised our college students and as well as our management to take necessity step to abolish child labour system in our country.

This conference was presided by Kongunadu Arts and Science College, Secretary and Director, Dr. C. A. Vasuki Madam. Dr. K. Palanivel, NSS Coordinator, gave welcome speech, College Principal, Dr. T. Muraleeshwari and College Dean SF, Dr. V. Sugantha felicitates the function. Dr. M. Ravikumar, Head, Department of Tamil (UA) gave Special address. NSS student Mr. M. Jeevbharathi gave vote of thanks. The event came to an end at 4.15 p.m with the National Anthem.

Nearly 500 participants from Various Departments and students from other Departments also attended this function. The NSS Coordinators Dr. K. Palanivel and Mrs. T. Deepika are the organising committee of this function

PRINCIPAL
KONGUNADU ARTS & SCIENCE COLLEGE
COIMBATORE-641 029.

Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.,
NSS Programme Officer Uni
Kongunadu Arts & Scien
Coimbatore - 6

| | |
|---|---|
| Name of the Activity | Walk for Saving Mother Earth – A Mega Environmental Awareness Rally |
| Organising Unit/ Agency/ Collaborating Agency | Voyce Foundation, Coimbatore |
| Number of Students participated | 125 |

பெருகி வரும் சுற்றுச்சூழல் மாசுபாட்டிலிருந்து கோவையையும் அதன் சுற்றுப்புற கிராமங்களையும், விவசாய நிலங்களையும் காக்கும் வகையில் **"தாய் மண்ணைக் காக்க ஒரு நடைபயணம்"** என்ற பொருண்மையில் விழிப்புணர்வு பேரணி 08.01.2015, வியாழக்கிழமையன்று நடத்தப் பெற்றது. இப்பேரணிக்கான ஏற்பாடுகளை கோவை கருணா பாலிடெக்னிக் கல்லூரியும் கோவை வாய்ஸ் தன்னார்வ அமைப்பும் இணைந்து செய்திருந்தன. கோவை மற்றும் அதன் சுற்றுப்புறத்திலிருக்கும் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் 1000-க்கும் மேற்பட்டோர் பேரணியில் கலந்து கொண்டனர். இப்பேரணியில் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் 125 பேர் கலந்து கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.






நாட்டு நலப் பணித்திட்ட அலுவலா
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
கோயம்புத்தூர் – 641 029.

**English Translation:**

To protect our agriculture land and avoid pollution problems Coimbatore Suguna Polytechnic College, Voice Organisation Coimbatore and NSS students from various around college in Coimbatore jointly organised a awareness rally in the name "Walk for Saving Mother Earth" in 08.01.2015. In this rally nearly 1000 participants participated and benefited. 125 NSS Students of Unit 4&5 of Kongunadu Arts and Science College participated in this rally. In this rally they carry flex which is related to the importance of sand, tress, water and various natural resources.

PRINCIPAL
KONGUNADU ARTS & SCIENCE COLLEGE
COIMBATORE-641 029.

Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.,
NSS Programme Officer Unit - IV
Kongunadu Arts & Science College
Coimbatore - 641 029

| | |
|---|---|
| Name of the Activity | Human Chain Parade for Respect of Our National Flag |
| Organising Unit/ Agency/ Collaborating Agency | Nizhal Maiyam, Coimbatore |
| Number of Students participated | 250 |

இந்தியா நாட்டின் தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்தும் வகையில் கோவை அரசுக் கலைக் கல்லூரியும் கோவை நிழல் மையமும் இணைந்து மனித சங்கிலி அணிவகுப்பிற்கு 25.01.2015 அன்று ஏற்பாடு செய்திருந்தன. கவுண்டம்பாளையத்தில் இருந்து கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி வரை நீண்டிருந்த இம்மனித சங்கிலி அணிவகுப்பில் பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த மாணவ-மாணவியர் ஆர்வமுடன் கலந்து கொண்டு தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்தினர். இவ்வணி வகுப்பில் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவ-மாணவியர் 250-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.







நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
கோயமுத்தூர் – 641 029.

**English Translation:**

To induce a Patriotic sense and to give proper respect to our national flag Coimbatore Government Arts college along with Covai Nizhal Maiyam organized a Human Chain Formation in 25.01.2015. Human Chain has formed from Kaundampalayam to Kongunadu Arts and Science College, students from various colleges participated and benefited. In this chain 250 NSS Unit 4 &5 students of Kongunadu Arts and Science College participated and gave their proper respect to our country national flag. They insisted the importance of Helmet, obeying traffic rules and importance of human values. Banners and Flexes were used in this chain.

Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.,
NSS Programme Officer Unit - IV
Kongunadu Arts & Science College
Coimbatore - 641 029

PRINCIPAL
KONGUNADU ARTS & SCIENCE COLLEGE
COIMBATORE-641 029.

| | |
|---|---|
| Name of the Activity | Awareness rally on "Accidental Death in the Railway Tracks" |
| Organising Unit/ Agency/ Collaborating Agency | Railway Police, Mettupalayam Branch |
| Number of Students participated | 500 |

தொடர் வண்டி இருப்புப் பாதையில் அடிக்கடி விபத்து ஏற்படுவது இன்றைய காலகட்டத்தில் பெருகி வருகின்றது. இவ்விபத்துகள் குறித்த விழிப்புணர்வினை மக்களிடத்து ஏற்படுத்தும் வண்ணம் கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை மற்றும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றோடு மேட்டுப்பாளையம் தொடர்வண்டி நிலைய காவல் துறையினரும் இணைந்து விழிப்புணர்வுப் பேரணிக்கு 26.02.2015 அன்று ஏற்பாடு செய்திருந்தனர். இப்பேரணியைக் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி இணைச் செயலர் திருமதி. சி. ஏ. வாசுகி அவர்களும், கல்லூரி முதல்வர் முனைவர் த. முரளீஸ்வரி அவர்களும் தொடங்கி வைத்தனர். இதில் கல்லூரி மாணவர்கள் 500 பேர் கலந்து கொண்டனர். பின்னர் தொடர் வண்டி இருப்புப் பாதை விபத்துகள் குறித்து தமிழ்நாடு அரசுக்கு கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் பல்வேறு இடங்களில் ஆய்வு செய்து நான்கு அறிக்கைகளையும் சமர்ப்பித்தனர்.

நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
கோயம்புத்தூர் – 641 029.





**English Translation:**

Due to emergency we can see lot of accidents occurs on the railway tracks, day by day it is increasing, regarding this Kongunadu Arts and Science College NSS Unit 4 & 5, NCC, RRC and Railway Police, Mettupalayam Branch organised a One Day Rally Awareness programme on 26.02.2015. The rally was jointly inaugurated by Kongunadu Arts and Science College, Secretary and Director, Dr. C. A. Vasuki Madam and College Principal Dr. T. Muraleeshwari. In this rally 500 students of Kongunadu Arts and Science College participated and got benefited. Finally Kongunadu Arts and Science College NSS Unit 4 & 5 students have submitted four reports to Tamilnadu Government regarding this issue

PRINCIPAL
KONGUNADU ARTS & SCIENCE COLLEGE
COIMBATORE-641 029.

Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.,
NSS Programme Officer Unit - IV
Kongunadu Arts & Science College
Coimbatore - 641 029